**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ம் நாள் புதன்கிழமை**
**I.A.No.05/2026 In O.S.No.27/2023**

அண்ணாத்துரை ... மனுதாரர்/பிரதிவாதி

**//எதிராக//**

ராஜேந்திரன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 06.02.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இரத்தினம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.குமார் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

தாவா வழக்கினை மறுதிறவு செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் பிரதிவாதி. இம்மனுவானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வாதி தரப்பு விசாரணை முடிவடைந்து பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளனர். மேற்படி கிரைய ஆவணம் குறித்து சில கேள்விகள் வாதி தரப்பு சாட்சியிடம் கேட்காமல் விடுபட்டு போய்விட்டது. அவை இவ்வழக்கிற்கு மிகவும் அவசியமானதாகும். எனவே வாதி தரப்பு விசாரணையை மீண்டும் திறவு செய்யக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

2) மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். வாதி தரப்பு சாட்சியை கடந்த 05.08.2025 ல் முதன்மை வாக்குமூலம் தாக்கல் செய்து குறுக்கு விசாரணைக்காக 11.08.2025, 18.08.2025 மற்றும் 26.08.2025 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டு இதில் 18.08.2025 ல் பகுதி குறுக்கு விசாரணையும், 26.08.2025 ல் மீதமுள்ள குறுக்கு விசாரணையும் முடிக்கப்பட்டு விட்டது. பின்னிட்டு இதர சாட்சிகளும் விசாரிக்கப்பட்டனர். தற்போது வா.சா.1 யிடம் சில கேள்விகள் விடுபட்டு போய் விட்டதாக கூறியுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் வாதியின் கிரைய ஆவணம் குறித்து சில கேள்விகளை வா.சா.1 யிடம் கேட்க வேண்டுமென்றும் எனவே வாதி தரப்பு சாட்சியத்தை மறு திறவு செய்து வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டுமென வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்யப்பட்டது. இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தரப்பினர்களுக்கு தங்கள் விசாரணையை முழுமையாக நடத்த வாய்ப்பு அளிக்கப்படா விட்டால் அவர்களால் தங்கள் வழக்கில் அறுதியான தீர்வை எட்ட இயலாது. எனவே மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவானது நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.500/-ஐ செலவுத்தொகையாக 18.02.2026 ம் தேதிக்குள் வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 19.02.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

–இல்லை–

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 05/2026**
**in**
**O.S.No. 27/2023**

**DRAFT / FAIR ORDER**

**D.D.11.02.2026**
*********************************